விலை: சதம் 60

# ஈழநாடு

THE EELANADU

மலர்23 ஆனி 2 ஷஃபான் 13 இதழ் 122

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16-6-1981

யாழ், பொதுசன நூலகத்திலுள்ள

## சைக்கிள் கொட்டகையில் தற்காலிக வாசிகசாலை!

### யாழ். மாநகரசபை முடிவு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இயங்கிய வாசிகசாலைப் பகுதியையும் சிறுவர் பகுதியையும் தற்காலிகமாக நூலக வளவிலுள்ள சயிக்கிள் நிறுத்துமிடமான தகரக் கொட்டகையில் ஆரம்பிப்பதென யாழ் மாநகர சபை தீர்மானித்துள்ளது.

இத்தகரக் கொட்டகையை திருத்திஅமைப்பதற்கு யாழ் மாநகர நிதிக்குழு 84 ஆயிரத்து 843 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

யாழ் நகரில் அண்மையில் ஏற்பட்ட சேதங்களின் மதிப்பீடு சம்பந்தமாக யாழ் மாநகரசபையின் விசே கூட்டத்தில் ஆராயப்பட்டபோது நூல்நிலையம் எரிக்கப்பட்டதால்

[6ம் பக்கம் பார்க்க]

# யாழ். மாவட்ட தேர்தல் முடிவு இன்று பிற்பகல் வெளியாகும்

## வாக்குச்சீட்டுக்கள் காலை 8 மணிக்கு எண்ணப்படும்

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல் முடிவு, இன்று பிற்பகல் அறிவிக்கப்படும்.**

**வாக்குகள் இன்று காலை எட்டுமணிக்கு யாழ். செயலகத்தில் வைத்து எண்ணப்படும் என்றும் முடிவுகள் பிற்பகல் மூன்று மணியளவில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.**

மொத்தமாகவுள்ள 24 மாவட்டங்களிலும் 07 மாவட்டங்களில் ஐ. தே. கட்சி போட்டியின்றி தெரிவானதைத் தொடர்ந்து 17 மாவட்டங்களில் கடந்த நான்காம் திகதி அபிவிருத்தி சபைத் தேர்தல் நடைபெற்றது.

தேர்தலின் முடிவில் பதினொரு மாவட்ட சபைகளை ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றியது- ஐந்து மாவட்டங்களில் தமிழர் விடுதலை கூட்டணி வெற்றியீட்டி, மாவட்ட சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் எண்ணப்படாத சுமார் நாற்பது வாக்குப் பெட்டிகளிலுள்ள வாக்குச்சீட்டுக்கள் இன்று எண்ணப்படும்.

## 'துப்பாக்கிசூட்டு காயங்கள் காணப்பட்டன''

### சண்முகம் மரணவிசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''இறந்தவரின் தலையில் பெரிய அளவில் காயம் காணப்பட்டதுடன் நெற்றியில் துளைகாயம் காணப்பட்டது. அது துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டது.''

நீர்வேலியைச் சேர்ந்த சலவைத் தொழிலாளி கணபதிப் பிள்ளை சண்முகத்தின் மரண விசாரணையில் சட்டவைத்திய அதிகாரி என். சரவணபவானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் நேற்றுக் காலை மரணவிசாரணை நடைபெற்றது.

பொலிஸ் தரப்பில் கன்னுகம் சப்இன்ஸ்பெக்டர் எஸ். சிவராசா ஆஜரானார். இறந்தவரின் நலனைக் கவனிக்க சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம் ஆஜரானார்.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் என். சரவணபவானந்தன் கூறியதாவது: யாழ். ஆஸ்பத்திரியில் இம்மாதம் 3-ம் தேதி இறந்த சண்முகத்தின் சடலத்தில் பிரேதபரிசோதனை நடத்தினேன். நெற்றியில் சூட்டுக் காயம் காணப்பட்டது. மிக நெருங்கிய தூரத்திலிருந்து சுட்டிருக்கவேண்டும். பிரேத பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்''.

## துப்பாக்கிச்சூடு பற்றியும் சாட்சியமளிக்கலாம்

### டி. ஐ. ஜி. 'சுந்தர்' தகவல்

[யாழ்ப்பாணம்]

''தீவைத்தல், கொள்ளை சம்பவங்கள் மட்டுமன்றி துப்பாக்கிசூடு, தாக்குதல் சம்பவங்கள் பற்றியும் பொதுமக்கள் பொலிஸ் விசாரணைக்குழுமுன்பாக சாட்சியமளிக்கலாம். இதுவரை கிடைத்த சாட்சியங்கள் தொடர்பாக நேர்முக விசாரணை நடைபெற்று வருகிறது''

பொலிஸ் விசாரணை குழுத் தலைவர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி, தங்களுக்கு, தங்கள் உடமைகளுக்கு நேர்ந்ததைப் பற்றியும், சம்பவங்களை நேரில் கண்டிருந்தால், அதுபற்றியும், இவ்விசாரணைக்குழு முன் தெரிவிக்கலாம் என்றும் அவர் கூறினார்

### காங்கேசன்துறை:

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வெளியில், சுன்னாகம், தெல்லிப்பளை மற்றும் இடங்களில்நடந்தசம்பவங்கள் பற்றி, காங்கேசன்துறை பட்டணசபை மண்டபத்தில் பொலிஸ் விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணம், பிரதிபொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் 10 பேர் சாட்சியமளித்தனர். இந்த 10 பேரின் சாட்சியங்கள் தொடர்பான நேர்முக விசாரணை நேற்றுக்காலை நடைபெற்றது. சேதமடைந்த இடங்கள் பொலிஸ் படப்பிடிப்பாளரினால் படம் பிடிக்கப்பட்டது. பொலிஸ் விசாரணைகுழுவினர் நேரில் சென்று இடங்களை பார்வையிட்டனர்.

நேற்றும் பத்துக்கும் மேற்பட்டவர்கள், விசாரணைக்குழு முன் சட்சியமளித்தனர்.

யாழ். பொதுசன நூலக பொறுப்பாளர் நேற்றுகாலை விசாரணைகுழுமுன் சாட்சியமளித்தார்

### தாக்கப்பட்டவர்

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஆர். சிறிதரன் 31ம் திகதி இரவு, வீட்டிலிருக்கும்போது தாக்கப்பட்டு தலையில் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரும் நேற்று பொலிஸ் விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்க தலையில் 'பண்டேஜு'டன் வந்திருந்தார்.

சம்பவத்தை எழுத்துமூலம் சமர்ப்பித்தார். சம்பவதினம் இரவு வீட்டில் தகப்பனுடனும் தங்கையுடனும் இருந்தபோது 15 பேருக்கு மேல் வீட்டிற்குள் புகுந்து றேடியோ தளபாடங்களை சேதப்படுத்தி தாக்கியதாகவும் நாச்சிமார் கோவிலடி வீதியிலுள்ள தமது வீடு தாக்கப்பட்டதாகவும் அருகிலுள்ள வீடுகளும் தாக்கப்பட்டதாகவும் இவற்றை விசாரணைக்குழுவிடம் தான் எழுத்துமூலம் சமர்ப்பித்ததாகவும் கூறினார்.

அரியா ஹோட்டல் உரிமையாளர் கே. தணிகாசலம் நேற்று சாட்சியமளிக்க வந்திருந்தார். எழுத்துமூலம் சம்பவத்தை தெரிவித்ததாக கூறினார்.

சம்பவம்நடந்தபோது உதவியில்லாமல் தான் மேல்மாடியில் இருந்ததாகவும் தாக்குதல் நடத்தியவர்களில் சிலரை தம்மால் அடையாளம் காட்ட முடியும் என்றும் விசாரணைக் குழுவிடம் சமர்ப்பித்த மகஜரில் தெரிவித்திருப்பதாகக் கூறினார்.

## எழுத்தாளர் கவனத்துக்கு

ஃ தரமான சிறுகதைகள் ஃ கவிதைகள் ஃ கட்டுரைகள் குறுநாவல்கள் ஃ நாவல்கள் ஃ காவியங்கள் ஃ சுவையான சம்பவங்கள் ஃ பிற ஆக்கங்கள் எழுத்தாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

**ஆசிரியர்,**
வாரமலர், 'ஈழநாடு',
த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.

### புத்துவெட்டுவான் கார் கடத்தல்

## மூன்று இளைஞர்கள் பிணையில் விடுதலை!

[அனுராதபுரம்]

புத்துவெட்டுவான் கார் கடத்கல் தொடர்பாக கடந்த 6 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து இளைஞர்களில் மூவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த ஐந்து இளைஞர்களையும் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு சட்டத்தரணிகள் எஸ். கே. மகேந்திரன், ஆர். இ. தம்பிரத்தினம் ஆகியோர் தாக்கல் செய்த மனு நேற்று அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. இராமநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சட்டத்தரணிகளின் வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி மூன்று இளைஞர்களை தலா 500 ரூப பிணையில் செல்ல அனுமதித்ததுடன் மற்றும் இரண்டு சந்தேகநபர்கள் தொடர்பாக ஜுலை மாதம் 28ம் திகதி விசாரணை நடாத்துவதாக தெரிவித்தார்.

சிவசுப்பிரமணியம், ஜெயச்சந்திரன், நீதிராசா ஆகிய இளைஞர்களே பிணையில் விடுவிக்கப்பட்டவர்களாவர். [கு]

## ரஜீவ்காந்தி முன்னணியில்

[புதுடில்லி]

உத்தரப்பிரதேசத்திலுள்ள 'அமெதி' தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் இந்திராகாங்கிரஸ் வேட்பாளர் திரு. ரஜீவ்காந்தி முன்னணியில் திகழ்கிறார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மூத்த முதல்வரான இவர், தன்னை எதிர்த்துப் போட்டியிடும் முக்கியவேட்பாளரைப் பார்க்கிலும் 1,64,000 வாக்குகள் கூடுதலாகப்பெற்று முன்னணியில் திகழ்கிறார்.

## கொலைஎன்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சலவைத் தொழிலாளி சண்முகத்தின் மரணம் கொலை எனத் தீர்ப்பளித்த நீதவான், துப்பாக்கி சன்னபதிவு ஏட்டையும், வாகன நடமாட்ட புத்தகத்தையும், வழக்கமான தகவல் புத்தகத்தையும் சமர்ப்பிக்குமாறு சுன்னாகம் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரிக்கு கட்டளையிட்டார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் இவ்விசாரணை நடைபெற்றது.

**மணிவாக்கு**

வயதை முன்னிட்டுப் பெரியவர் ஆவது சிறந்தது. மனப்பான்மையை முன்னிட்டு பெரியவர் ஆவது அதிலும் சிறந்தது. — அருள்விருந்து.

# நமது நோக்கு

## யாழ்ப்பாணப் பெருமக்களுக்கு

தவிர்க்கமுடியாத முறையில் துன்பம் மனிதனுக்குப் பாடம் புகட்டிக்கொண்டிருக்கிறது.

இன்று யாழ்ப்பாணப் பொதுமக்கள் —சிறப்பாக நகர மக்கள் அவசிய கவனம் செலுத்தவேண்டிய கருத்துக்கள் சிலவற்றைச் சமர்ப்பிப்பது எமது கடமை எனக் கருதுகிறோம்.

இங்கு நடைபெற்ற அசம்பாவிதங்களைப் பரந்த அடிப்படையில் கணிப்பது பயன் தர வல்லது.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில், ஆசியாவில், மத்திய கிழக்கில், இந்திய உப கண்டத்தில் அரசியல் பூசல்கள், கொலை, கொலை முயற்சி, சிறு போர், பெரும் போர், உள்நாட்டுக் கலகம் போன்ற வடிவில் நாடுகளின் சமாதான அன்றாட வாழ்க்கையைக் கெடுத்து வருகின்றன.

சில நாடுகளில் இராணுவ ஆட்சியே பலம்பெற்றிருக்கிறது. மிகப் பழமையான இங்கிலாந்தில் நடைபெறும் இன்றைய ஆட்சியில் ஐரிஷ் பிரச்னைக்குச் சமாதானத் தீர்வு காணச் சம்மதம் உருப்படவில்லை.

இந்தக் குழப்பமான உலக சூழ்நிலை ஒரு தொற்று நோய் போன்றது. பல நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கை —இச் சிறு தீவு ஒரு புண்ணிய பூமி என்று வெளிநாட்டார் எண்ணி வந்ததற்கு நியாயமிருந்தது.

இதற்குப் பங்கம் விளைக்க அரசாங்கத்தின் காவலர்களும், ஆதரவாளர்களும் நியாயமற்ற முறையில் அழிவுப் பாதையை நாடுவது உலகின் கவனத்தை ஈர்க்க வல்லது.

எனவே நாட்டின் ஆட்சியாளர்களின் மனமாற்றத்துக்கும், சர்வதேச அனுதாபத்துக்கும் ஏற்றமுறையில் நம் உடனடியாக எங்கள் வாழ்க்கை முறையில் அவசிய மாற்றங்களை உருவாக்க முன்வரவேண்டும். சமூக உணர்வு எம்மில் பலருக்கு இன்னும் எட்டாத விடயமாக இருப்பது வேதனைக்குரியது.

அரசியல் குரோதங்களைத் தற்காலிகமாக ஆவது நிறுத்திவைத்து இப்பகுதி மக்கள், நலிவடைந்தவர்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமைப்பட்டு, ஒருமனத்துடன் எங்கள் அன்றாட வாழ்வில் மட்டுமல்ல, வைபவங்களிலேயும், டாம்பீக நடைமுறையையும், அனாவசிய ஆடம்பரங்களையும் கைவிட்டுச் சிக்கனத்தையும், கட்டுப்பாட்டையும் இறுகக் கடைப்பிடிப்போமாக.

நகர வாழ்வு சீரடைந்து வரும் வரையும், மக்களின் துயரம் தக்க வகையில் துடைக்கப்பட்ட நிலை தெளிவாகும் வரையும் எவ்வித களியாட்டமோ, வேடிக்கையோ நியாயமற்றதென்பதை எமது செயலிற் காட்ட முன்வருவோமாக.

புனரமைப்புத் திட்டங்கள் —குறுகிய காலமென்றால் என்ன, நீண்ட காலம் என்றால் என்ன —மாநகர சபையின் தெளிந்த முடிவுக்கும், சட்ட அமைப்புக்கும் ஏற்ற வகையில் தொழிற்பட உதவுவோமாக.

நகரத்தின் புனித நிலைமையைப் பேணவும், அதனைத் திருத்தமாக முன்னேற்றவும் ஒவ்வொரு மாநகரப் பிரஜையும் திடசங்கற்பம் பூண்டு விளங்கவேண்டும்.

சாதாரண காலத்தில் யாழ். நகரத்தில் நடைபெறும் விபத்துக்கள், வீதி விபத்துக்கள் கற்பனைக்கு எட்டாத நிலை அடைந்திருந்தன.

இன்றைய அவலநிலையில் பாதசாரிகளும், வாகன சாரதிகளும் அசாதாரண கவனம் எடுத்தாலொழிய இன்று நாமடைந்த அறிவுக்கு மேலான அபாயநிலை உருவெடுக்கும் என்பதைக் கவனத்திற் கொள்வோமாக.

## யாழ்ப்பாணப் பிரதேசத்தில்
# நிரந்தர அமைதிக்கு அரசியல் தீர்வே பரிகாரம்!
## கம். கட்சி அரசியல் பீடம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

ஒரு ஐ.தே. கட்சி அபேட்சகரும் ஒரு பொலிஸ் சார்ஜன்டும் ஒரு நபரால் அல்லது நபர்களால் கொல்லப்பட்டதற்கு யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கப்படவேண்டிய அவசியமான மொத்த தண்டனைதான் அண்மையில் நடந்த வன்செயல்கள் என்று நியாயப்படுத்தவும் சமாதானம் கூறவும் முற்படுகிறவர்களை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் அரசியல் அதிகாரபீடம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

மேற்படி பீடத்தின் கூட்டம் கடந்த 9ந் திகதி நடந்தபோது இது தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அத் தீர்மானத்திலேயே இக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தின் சில அம்சங்கள் வருமாறு:

யாழ்ப்பாண வன்செயல்கள் தொடர்பாக மாவட்டக் குழு அனுப்பியிருந்த அறிக்கையையும் ஸ்தலத்துக்குச் சென்று நேரடியாக ஆராய்ந்து திரு. பீட்டர் கெனமன் சமர்ப்பித்த அறிக்கையையும் கட்சியின் அரசியல் அதிகாரபீடம் மிகக் கவலையுடன் ஆராய்ந்தது.

மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தல்கள் நடக்கவிருந்த வேளையில், அங்குள்ள பாதுகாப்பு படைகளுக்கு உதவியாக அனுப்பிவைக்கப்பட்ட பாதுகாப்பு படைகளின் ஒரு பிரிவினர் யாழ் மாவட்டத்தில் பெருமளவில் தீயிடுவதிலும், பொதுசனங்களையும் சொத்துக்களையும் தாக்கி சேதப்படுத்துவதிலும் ஈடுபட்டதை அதிகாரபீடம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அமைதியைப் பாதுகாக்க அனுப்பப்பட்ட பாதுகாப்புப் படையினர் இந்த அழிவுவேலைகளில் ஈடுபட்ட சமயத்தில் பல அமைச்சர்களும், அவர்களின் பாதுகாப்புப்பிரிவு உயர்அதிகாரிகளும் நேரடியாக யாழ்ப்பாணத்திலிருந்துள்ளனர்.

யாழ்ப்பாண பொதுநூலகமும் அதிலிருந்த 25,000 நூல்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையகம், யாழ்ப்பாண எம்.பி.யின் வாசஸ்தலம், தினசரி ஏடான 'ஈழநாடு' காரியாலயம், சுன்னாகம், யாழ்ப்பாண பொதுச் சந்தைக் கட்டிடங்கள், 00க்கும் மேற்பட்ட கடைகள், ஏராளமான வாகனங்கள், சைக்கிள்கள் போன்றவை அழிவுக்குள்ளானவற்றில் சிலவாகும்.

பாதுகாப்புப் படையினரால் பலர் கொலைப்பட்டிருப்பது பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல ஜனநாயக சக்திகளும்

5-ம் பக்கம் பார்க்க

**மக்கள் கருத்து**

## யாழ். பொதுஜன நூலகம்

யாழ் பொதுஜன நூலகம் பற்றிய 13-6-81 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் மிகப் பொருத்தமானதும் பாராட்டுக்குரியதுமாகும்.

இந்த நூலகத்தின் ஆரம்ப காலம் தொட்டு தொடர்புடையவனென்ற அடிப்படையில் பின்வரும் கருத்துக்களை பொதுமக்களுக்குச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளேன்:-


(1) இவ்விதம் நூலகத்தை தீக்கிரையாக்கின காட்டுமிராண்டித்தனச் சம்பவம் வடஇந்தியாவிலே புகழ்பெற்ற நாலந்தா பல்கலைக்கழகத்தில் 12ம் நூற்றாண்டின்முடிவில் நடைபெற்றதாக வரலாறு குறிக்கின்றது. சுமார் 800 வருடங்களுக்குப் பின் இந்தநாட்டின் சிறந்த நூலகமென்று கருதப்படும் யாழ் பொதுஜனநூலகம் இவ்வாறு எரிக்கப்பட்ட தீய செயல் இந்த ஸ்தாபனத்தின் முன்னோடியான மாவட்ட நீதிமன்றச் செயலாளர் அமரர் செல்லப்பாவுடன் இப்பணியில் பங்குகொண்ட அனைவருக்கும் தாங்கொணாத்துயரமாகும்.

2 இந்த அக்கிரமத்தை நடத்திமுடித்தவர்கள் நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் பொறுப்புடையவர்கள் என்றால், இதன் கொடுமை கற்பனைக்கப்பாற்பட்டதே.

3 இந்த அழிவின் விளைவு வடபகுதி மக்களுக்கு மட்டுமல்ல; நாட்டின் அரசியல் விருத்திக்கேற்பட்ட அளப்பரிய சவால் என்பதை நாம் உணர

(5ம் பக்கம் பார்க்க)


# ஜஎம்ரீ-533 ட்ராக்டர்





விளைச்சலைப் பெருக்கும்! லாபத்தைக் கூட்டும்!

இதோ...செழிப்பான அதிக விளைச்சலை,நம்ப முடியாத அளவு சொற்ப செலவில் பெற உதவும் ஒரு சிக்கன ட்ராக்டர் -ஜஎம்ரீ-533 யுனிவர்சல் விவசாய ட்ராக்டர். இயக்குவது சுலபம், செலுத்துவதும் சுலபம், டீசல் செலவோ மிகச் சொற்பம்.

ஜஎம்ரீ-533 ட்ராக்டரில் இழுக்கும் அல்லது இணைக்கும் துணைக்கருவிகள் எவற்றையும் பொருத்தலாம். வயலிலும் தோட்டத்திலும் அது வளம் பெருகச் செய்யும்.

இருப்பிலிருந்து கிடைக்கும் விலை ரூ. 78,950/-

தொடர்பு கொள்ளுங்கள்:
இலங்கை அரச வர்த்தக (ட்ராக்டர்) கூட்டுத்தாபனம்
244, ஆனல்ட் ரத்நாயக்க மாவத்தை
கொழும்பு 10.
தொலைபேசி: 96833/91712/91710

RJA 948


வவனியா

# புத்தகக்கடையில் கொள்ளை: பக்கத்துக்கடைக்காரர் கைது!

(வவனியா)

வவனியா பஜார்வீதியில் அமைந்துள்ள புத்தகக் கடை ஒன்றிலிருந்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக வவனியா பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 2ம் திகதி இரவு கடையைப் பூட்டி விட்டு மறுநாள் காலை திரும்பி வந்து பார்த்தபோது வேறொரு பூட்டினால் கதவு பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு சந்தேகம் ஏற்பட்டதாகவும் கதவைத் திறந்து பார்த்தபின்பே கடையினுள்ளே இருந்த பொருட்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது தெரியவந்ததாகவும் கடை உரிமையாளரான ஏ.ஜி. கிறிஸ்டி என்பவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தகவல் அறிந்ததும் வவனியா பொலிஸ் அத்தியட்சகர் திரு. சி.பி. ஜயசூரியா ஸ்தலத்திற்கு விரைந்தார். புத்தகக் கடையின் பக்கத்துத் தேநீர்க் கடையிலிருந்து புத்தகக் கடையின் பூட்டு, திறப்பு, கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் என்பவற்றையும் பொலிசார் கைப்பற்றினார்கள். சந்தேகத்தின் பேரில் தேநீர்க்கடை உரிமையாளரான பி.எச். ஜயரத்தினவையும், அவரது சகாக்கள் நால்வரையும் பொலிசார் கைதுசெய்து வவனியா மாவட்ட நீதவான் திரு பெரேரா முன்னிலையில் ஆஜர் செய்தனர். சந்தேக நபர்களை இம்மாதம் 15ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். புலன்விசாரணைகள் தொடர்கின்றன. (அ)

## இன்று தேர்

[நெல்லியடி]

கரவெட்டி கச்சந்தோப்பு பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 8ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. இன்றும் நாளையும் முறையே தேர், தீர்த்தத்திருவிழாக்கள் நடைபெறும்.

டியூட்டரி மாணவி கமலம் கொலைவழக்கு

# "தனிமையில் கதைப்பதற்கென்றால் கமலம் எம்முடன் வந்திருக்கமாட்டார்

## கோபியின்கரைச்சலைத் தீர்க்க என்றே கூட்டிச்சென்றோம்"

### 1-ம் எதிரி ராஜன் சாட்சியம்

(புலோலி நிருபர்)

"சம்பவதினம் பஸ் நிலையத்தில் கமலத்தைச் சந்தித்த போது தும்பனைக் கோபியைச் சந்தித்துப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும் இல்லையேல் கோபி தொடர்ந்தும் கரைச்சல் தந்துகொண்டிருப்பான் என்று கூறியே கமலத்தைக் கூட்டிச் சென்றோம்".

இவ்வாறு பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த 1ம் எதிரியான ராஜன் நீதிமன்றத்திற்கு உதவியாக ஆஜரான சட்டத்தரணி திரு. எம். சோமசுந்தரத்தால் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்டார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. நீதிமன்றத்திற்கு உதவியாக ஆஜரான சட்டத்தரணி திரு. சோமசுந்தரத்தால் தொடர்ந்தும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட 1ம் எதிரி சொன்னதாவது:

"1980 பெப்ரவரி 21ம் திகதி நான் கமலத்தை வல்விபுரக் கோவிலடிக்குக் கூட்டிப்போன போது என்ன காரணத்திற்காகக் கமலத்தை அங்கு கூட்டிப் போகிறேன் என்று போவதற்கு முன்னர் கமலத்திற்குச் சொல்லவில்லை. நான் காரணத்தை முன் கூட்டியே சொல்லியிருந்தால் கமலம் அங்கு வரமறுத்திருப்பார்.

"சம்பவதினம் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் கமலத்தைச் சந்தித்தபோது கமலத்துடன் தனிமையிலே கதைப்பதற்கு என்ன காரணம் இருந்ததென்பதை முன் கூட்டியே பஸ் நிலையத்தில் கமலத்திற்குச் சொல்லியிருந்தால் கமலம் அப்படி என்னுடன் வருவதற்கு ஒத்துக்கொண்டிருக்கமாட்டார் என்பது எனக்குத் தெரியும்.

"ரியூஷன் முடிந்து பருத்தித்துறை பஸ் நிலையத்திற்குவரும் கமலம் ஏழேகால் மணி 763ம் இலக்க கிரிமலை பஸ்ஸில் தான் வழமையாக பொலிகண்டிக்குச் செல்வார். கமலத்தின் தம்பிமாரும் பேரனும் கமலத்தைப் பொலிகண்டி பஸ் தரிப்பு நிலையத்தில் எதிர்பார்த்துக் கொண்டு நிற்பார்கள். தம்பிமாரும் பேரனும் தான் ரியூஷன் வருவதை எதிர்பார்த்து பொலிகண்டி பஸ்தரிப்பு நிலையத்தில் நிற்பார்கள் என்பது கமலத்திற்குத் தெரியும். கமலம் வழக்கமான பஸ்ஸில் வந்து இறங்காவிட்டால் கமலத்தின் தம்பிமாரும் பேரனும் ஏமாற்றமடைவார்கள் என்பதும் கமலத்திற்குத் தெரியும். ஆனாலும் சிலவேளைகளில் பஸ் கிடைக்காத காரணத்தால் கமலம் வழக்கமாகச் செல்லும் பஸ்ஸை விடுத்து வேறு பஸ்ஸில் போவதுமுண்டு. கமலம் வழக்கமாகச் செல்லும் ஏழேகால் மணி 763ம் இலக்க கிரிமலை பஸ்ஸில் போகாது விட்டால் அந்த பஸ்ஸில் போகாததற்கான காரணத்தைக் கமலம் பெற்றோருக்குச் சொல்லவேண்டுமென்பது எனக்குத் தெரியும்.

### றெபின்சனுடன் கதைப்பதற்கென்றால் வந்திருக்கமாட்டார்

"கமலம் சசிதரனைத் தான் காதலித்தபடியாலும் றெபின்சனில் விருப்பமில்லாதபடியாலும் அன்று நான் கமலத்தைத் தனிமையில் றெபின்சனுடன் கதைக்க வரும்படி கேட்டிருந்தால் கமலம் வந்திருக்கமாட்டார். தும்பனைக் கோபி தனக்குக் கரைச்சல் கொடுப்பதாக நான் கடற்றொழிலுக்குச் சென்ற நாட்களிலே கமலம் 2ம் எதிரிக்குச் சொல்லியிருந்தார். நான் இல்லாத நாட்களிலே ஏதாவது பிரச்னை வந்தால் அதனை 2ம் எதிரிக்குச் சொல்லும்படி நான் கமலத்திற்குச் சொல்லியிருந்தேன்.

### தும்பனைக் கோபி

தும்பனைக் கோபி கமலத்தைப் பகிடி பண்ணியதாகக் கமலம் எனக்கு முறையிட்டிருந்தார். இன்னொரு தடவை பஸ்ஸொன்றுக்குள் கோபி ஒரு கடிதத்தை கமலத்தின் மடியில் போட்டதாகவும் 2ம் எதிரியிடம் கமலம் முறையிட்டிருந்தார். அதனுடன் கோபி கடிதத்தைப் போட்டபோது கமலம் தனது செருப்பைக் கழற்றிக் கோபிக்கு அடிக்க எத்தனித்ததாகக் கமலம் தமக்குச் சொன்னதாக 2ம் எதிரி எனக்குச் சொல்லியிருந்தார்.

"நான் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் வைத்துக் கமலத்திற்கு தும்பனைக் கோபி சவால் விட்டபடியால் ஏதாவது ஆபத்தான காரியங்களைச் செய்யக்கூடும். அவனைச் சும்மாவிட்டால் பிரச்னை தீராது எனவே நாங்கள் எல்லோரும் தும்பனைக்குப் போய்க் கோபியைக் கண்டு வெருட்டிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று கூறினேன். கமலம் அதற்கு உடன்பட்டு எங்களுடன் வந்தார்.

கொலைச்சம்பவத்திற்கு முன்னர் ஒரு நாள் இரவீந்திரன் என்ற பையனும் தன்னோடு சேஷ்டை விட்டதாகக் கமலம் என்னிடம் முறைப்பாடு செய்திருந்தார். நான் அச்சம்பவம் தொடர்பாக இரவீந்திரனிடம் சென்று அவரை வெருட்டியுள்ளேன். அதன் பிறகு இரவீந்திரன் கமலத்துடன் சேஷ்டை விடுவதில்லை.

சான்றுப் பொருளான இறந்த கமலத்தின் டயறி சாட்சிக்குக் காட்டப்பட்டது. அந்த டயறியில் பெயர், விலாசம் உள்ள பக்கத்திலே

(5ம் பக்கம் பார்க்க)

"என் உயிர் இருக்கும் வரை

# சசிதரனைத்தவிர வேறு எவரையும்மணக்கமாட்டேன்'

## ஆனைவிழுந்தான் சந்தியில் கமலம் சொன்னதாக ராஜன் சாட்சியம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

2-ம் எதிரி ஆனைவிழுந்தான் சந்தியில் கமலத்தைப் பலாத்காரம் செய்தபோது நான் எனது உயிர் இருக்கும்வரை சசிதரனைத் தவிர வேறொருவரையும் கலியாணம்செய்யமாட்டேன் என்று கமலம் கூற 2-ம் எதிரி அப்படி என்றால் நான் உன்னைக் கொலை செய்துவிடுவேன். எனக்கு இல்லாத பொருள் சசிதரன் அனுபவிக்க விடமாட்டேன்' என்று சொன்னார்.

இவ்வாறு கமலம் இராமச்சந்திரன் கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த 1-ம் எதிரி ராஜன் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு உதவியாக ஆஜரான சட்டத்தரணி எம். சோமசுந்தரத்தினால் குறுக்கு விசாரணை செய்யப்படும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"1980 பெப்ரவரி 21-ம் திகதி இரவு ஆனைவிழுந்தான் சந்தியில் 2-ம் எதிரி கமலத்தைப் பலாத்காரம் செய்த போது கமலம் 2-ம் எதிரியைப் பார்த்து, நீங்கள் எதற்காக இங்கே வருவதாக எனக்குக் கூறிவிட்டு இப்போது என்ன கதைக்கிறீர்கள் என்று கேட்டார். இதன் கருத்து கோபியிடம் பேசுவதற்கு என்று சொல்லி கூட்டிவந்த பின்னர் இந்த இடத்தில் நின்று கதைக்கவேண்டுமா? என்பது தான்.

### பலாத்காரம்

அப்போது அவர்களுக்குச் சுமார் 100 யார் தூரத்தில் நின்ற நான், எப்படியும் கோபியிடம் போகத்தான் போகிறோம் ஆனால் றெபின்சன் அதற்கிடையில் உன்னோடு ஏதோ கதைக்கவேண்டுமாம் என்று கமலத்திற்குச் சொன்னேன். றெபின்சன் கமலத்துடன் கதைத்துக்கொண்டிருந்தபோது கமலத்தின் கையைப் பிடித்தும் பின் கமலத்தின் கழுத்தில் கையைப்போட்டும் பலாத்காரம் செய்தார். 2-ம் எதிரி (றெபின்சன்) கமலத்தை கொலைசெய்யமாட்டார் என்ற காரணத்தினுல் அவர் அதுவரை செய்த பலாத்காரத்தைப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

### திரும்பத்திரும்ப கேள்வியும்பதிலும்

2ம் எதிரி கமலத்தை பலாத்காரம் செய்தபோது ஒரு கட்டத்திலே கமலம் சொன்னுள் நான் எனது உயிர் இருக்கும் வரை சசிதரனைத்தவிர வேறு ஒருவரையும் கலியாணம் செய்யமாட்டேன் என்று. அப்பொழுது 2ம் எதிரி, அப்படி என்றால் நான் உன்னைக் கொலை செய்துவிடுவேன். எனக்கு இல்லாத பொருளை சசிதரன் அனுபவிக்கவிடமாட்டேன்' என்று கமலத்திற்குச் சொன்னார். பின்பு 2ம் எதிரி 'கடைசியாக நீஎன்ன சொல்கிறாய்' 'என்று கமலத்தைக் கேட்டார். கமலம் 'நான் தானே எல்லாம் சொல்லிவிட்டேன் நீஎன்ன திரும்பத்திரும்பக்கேட்கிறாய்' என்றுசொன்னுள். அப்போது 2ம் எதிரி

(5-ம் பக்கம் பார்க்க)




நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் அரசாங்க எச்சரிக்கை:
புகை பிடித்தல் உடல் நலத்திற்குக் கேடாகலாம்.

ஒன்று சதம் 40.

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-சாரதா
ஞான ஒளி

வெஸ்லி
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-லதா
நாளை நமதே

ஹரன்-யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Shaft's Big Score
Color
Adults Only

வெலிங்டன்
தினசரி 10-30, 2-30 6-00
ரஜனிகாந்த - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30 2-30, 6-00
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-00
★ சிவாஜி ★ ஜெமினிகணேசன் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ மனோரமா
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
★ ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ மேஜர் சுந்தரராஜன் நடிக்கும்
தீ

மனோகரா தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, 9-30
(யாழ்ப்பாணம்)
CAR
(Action Film)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-30, 6-15
சிவாஜி கணேசன் - கே. ஆர் விஜயா
ரிஷிமூலம்

ராஜா யாழ்ப்பாணம் இன்று மட்டும்
தினசரி: காலை 10-30, 2-30 6-00
● பாக்கியராஜ் ● ரதி ● சுமங்கலி
புதிய வார்ப்புகள்
(சிறுவர்கள் வயது வந்தவர்கள் மட்டும்)

மீண்டும் ஜனக்கூட்டத்துடன் காட்சியளிக்கிறது!
ஜெயநடைபோடும் 4வது வெற்றிவாரம்!!
சாந்தி (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள் 10-30, 2-15, 6-15.
சிவாஜி-விஜயா-மேஜர்-பாலாஜி-தேங்காய்
தர்மராஜா
ஜப்பானில் படமாக்கப்பட்ட, சண்டைக் காட்சிகள் நிறைந்த வண்ணப் படம்!

## தனிமையில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர் இதோ என்று குறிப்பிட்டிருந்தது. அது யார் என்று சாட்சியைக் கேட்டபோது இதோ என்பது கமலத்தைக் குறிக்கும் என்று சாட்சி கூறினார்.

ஆனைவிழுந்தான் சந்தியிலிருந்து வலது பக்கம் திரும்பிப் போனால் வல்லிபுரக் கோவிலுக்குப் போகலாம். கமலத்திற்கு ஆனைவிழுந்தான் சந்தியிலிருந்து எந்தப் பக்கத்தால் போனால் அம்மனுக்கும் போகலாம் என்பது தெரியாது. 2ம் எதிரி கமலத்தை ஆனைவிழுந்தான் சந்தியிலிருந்து வலப் பக்கமாகத் திருப்பும் றோட்டின் அருகில் வைத்துக் கதைத்துக் கொண்டிருந்தார். (அ)

## பரிசளிப்பு விழா

(அரியாலை)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா ஜூன் மாதம் 20ம் திகதி சனிக்கிழமை நடைபெற விருக்கிறது.

கல்லூரி அதிபர் திருமதி செல்லையா கல்லூரியின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பார். தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதியட்சகர் பேராயர் மகா அருள்திரு. டி. ஜெ. அம்பலவாணர் ஆண்டகை பரிசளிப்பு உரைநிகழ்த்துவார்கள்.

## சசிதரனைத்...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

கமலத்தின் கழுத்தை நெரித்தார். கமலம் 'ஐயோ என்னை கொல்லாதே' என்று கத்தினாள். பின்பு 2ம் எதிரி கமலத்தை மீண்டும் 'இப்போ என்ன சொல்கிறாய்?' என்று கேட்டார். கமலம் மீண்டும் அதையே சொன்னாள் 2ம் எதிரி மீண்டும் கழுத்தை நெரித்தார். நான் 2ம் எதிரி வெட்டுகிறார் என்றுதான் நினைத்தேன். ஆனால் கமலம் கீழே விழுந்தாள்

### தொடர்ந்து கழுத்தைநெரித்தார்

கமலம் கீழே விழுவதற்கு முன் 2ம் எதிரி கழுத்தை நெரித்த போது கமலம் என்னை நோக்கி 'என்ன அண்ணை பார்த்துக்கொண்டு நிற்கிறாய்' என்று கேட்டாள் நான் அவன் உன்னைக் கொல்லமாட்டான். உன்னை கொல்வதற்கு அவன் கல் நெஞ்சன் அல்ல, அவன் கேட்பதற்கு நீ பதில்சொல் ஒன்றும் நடக்காது' என்று சொன்னேன் அத்துடன் ஜெமீன் கணக்கிய ணம் செய்யச்சம்மதி குமாறு சொன்னேன். ஆனால் அவள் சம்மதிக்கவில்லை. 2ம் எதிரி கமலத்தின் கழுத்தை தொடர்ச்சியாக நெரித்துக் கொண்டிருந்தான். நான் அப்போதும் 2ம் எதிரி கமலத்தைக் கொலை செய்வதற்காகக் கழுத்தை நெரிக்கவில்லை வெருட்டுவதற்காகத்தான் கழுத்தை நெரிக்கிறான் என்றே நினைத்தேன் அத்துடன் 2ம் எதிரி கழுத்தை நெரித்துக்கொண்டிருக்க கமலம் எப்படியும் சம்மதம் தெரிவிப்பாள் என்றும் நினைத்தேன்,

### விழிகள் பிதுங்கி இருந்தது

ஆனால் நான் எதிர்பார்க்காத வகையில் கமலம் மயங்கி விழுந்துவிட்டாள். கமலம் மயங்கி கீழ விழுந்த போது விழி பிதுங்கியும் நாக்கு கடிபட்டுக்கொண்டுமிருந்தது அப்போது வெளிச்சத்தைக்கண்டதும் கமலத்தைக் கொண்டு ஓடினோம் அப்போது கமலம் இறந்து விட்டாளா இல்லையா என்பது எனக்குத் தெரியாது ஆனால் கண் பிதுங்கி இருந்த படியாலும் நாக்கு பல்வரிசையினுள் அகப்பட்டுக்கொண்டிருந்த படியாலும் கமலம் இறந்து விட்டாள் என நினைத்தேன்.

'கமலத்தைக் கொண்டு சென்று கீழ போட்டதும் நான் 2 எதிரிக்கு 'ஆள் செத்துப்போச்சுப் போல கிடக்குது எடா' என்று சொன்னேன் அதற்கு 2-ம் எதிரி ஒன்றும் சொல்லாமல் சிலை போல நின்று கமலத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். அதன் பின்புதான், வந்த வெளிச்சம் என்ன என்பதைப் பார்க்க நான் சென்றேன் கமலத்தை நாங்கள் உயிரோடு தட்டி ஓடவிட்டிருந்தால் எங்களுக்குப் பிரச்சினை வரும் என்பது தெரியும்! கமலம் கிழே ஆனைவிழுந்தான் சந்தியில் விழுந்தவுடன்தான் என்னடா கமலத்திற்கு நடந்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு போய்ப் பார்த்தேன் அப்போதுதான் லைட் வெளிச்சம் அவ்விடத்தை நோக்கி வந்தது.' [அ]

## யாழ் பொதுஜன

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாமா? ஏன் அகில உலகின் ஆத்மீக வளர்ச்சிக் கேற்பட்ட அபாயமென்றால் இதுபற்றிய விசாரணைக்கிடமுண்டா?

4) இப்பேரழிவு மாபெரும் மறுமலர்ச்சிக்குதவு மென்ற நம்பிக்கை வரலாறு கற்பிக்கும் பாடமென்ற முறையில் நாமெல்லோரும் நம்பிக்கைகொள்ள நியாயமுண்டு. ரோமகிரேக்க நாகரிகங்களின் அழிவே கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் உதயத்துக்கு உதவின. லண்டன் மாநகரில் 1666ல் ஏற்பட்ட பெருந்தீயே, இன்று உலகத்தின் உயிர்நாடியாய்த் தொடர்ந்திலங்கும் இலண்டன் மாநகரின் புத்துயிருக்கு வழிவகுத்தது. இவ்விதமாபெரும் துன்பம் பெரு வெற்றியாகமாறும் நிகழ்ச்சிகள் உலக சரித்திரத்தில் நாம் கண்ட அனுபவங்கள்

(5 யாழ்ப்பாண பொதுஜன நூலகத்தில் பொறுப்பு வாய்ந்த ஆலோசனைகளுடன் யாழ் மாநகரசபைக்கு உதவிய அவசிய கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படட்டால், தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டில்களிலாவது சிறுவர் பகுதியும், வாசிகசாலையும் உடனடியாகத் திறக்கப்படும்.

இக்கைங்கரியம் மனிதஉரிமைகள் சாசனத்தின், 19வது, 26வது ஷரத்துகளுக்கு அமைவதாகும்

(6, பயங்கரவாதத்துக்குப் பலியான இக்கலைக்கூடம் சீராகச்சிறப்பாகத் திருத்தியமைக்க முன்னரே நூலகம் இடங்கள் ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்படுமென்றும், பொதுமக்களின், மாணவர்களின் தொடர்கல்வி எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாதென்றும், காலகதியில், இந்நாட்டின் தமிழ்மக்களுக்கு ஒரு தேசிய நூலகமென்ற வரப்பிரசாதம் கிடைக்குமென்ற நம்பிக்கையைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

(6 நூலகப் புனரமைப்பில் பங்கு கொள்வது நகர மக்கள் ஒவ்வொருவரினதும் அத்தியாவசியமான கடமையாகும், பணம் படைத்தவர்கள், சிறந்த செல்லுநர்கள் தங்கள் உதவியைத் தாராளமாக வழங்க முன்வருவார்களாக! நூல்களை உதவ முன்வருவோர்க்கு உலகனைத்துமே என்றென்றும் ஆயினும் யாழ் நகர மக்கள் ஒவ்வொரு குடும்பம் ஒரு நூலாவது வழங்கவேண்டும் எனச் சபதம் செய்துகொள்ளவேண்டும் வசதிபடைத்தவர்கள் நூற்றுக்கணக்கில் உதவக்கூடியவர்கள் என விரும்புகிறேன்.

கு நேசையா
கண்டிக்குளி. 15-6-81

## நிரந்தர

(3ம் பக்கத் தொடர்ச்சி)

விழிப்புடன் இருக்கவேண்டிய அவசியத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்த விரும்புகின்றது அரசின ஆதரவுடனும், பராமரிப்பாலும் உருவாகியுள்ள பயங்கரவாதப் போக்கினை எதிர்க்கும்படியும் கேட்டுக்கொள்கின்றது. 1980ம் ஆண்டு நடந்த மறியல் போராட்டத்தின் போது தியாகி சோமபாலாவின் கொலையுடன் ஆரம்பமான இந்த பயங்கரவாதப் போக்கு இப்பொழுது யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய அளவில் நடத்தப்பட்டுள்ளது

ஒரு எதிரி நாட்டில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியே போல் யாழ்ப்பாணத்தை அரசாங்கம் நடத்தி வரும்வரை அங்கு வழமையான நிலைமையை உருவாக்கமுடியாதென்று கம்யூனிஸ்ட் கட்சி கருதுகின்றது. அதேசமயம் பின்வரும் அம்சங்களை வலியுறுத்துகின்றது.

1 யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட பேலதிக 'தொண்டர்' படையின் அமைப்பு, அரசியல் நிலைமை, தேர்ந்தெடுக்கப்பட்ட முறை பற்றி பொதுவிசாரணை நடத்தப்படவேண்டும்

2 வன்செயலைத் தூண்டியவர்கள், பொறுப்பாயிருந்தவர்கள் வேலைநீக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

3. வன்செயல்களால் நஷ்டமடைந்தவர்களுக்கு முழு நஷ்டஈடும் வழங்கப்படவேண்டும்.

4. எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எம்பிக்களைக் கைது செய்ய உத்தரவிட்டவர்கள் உட்பட மாவட்டசபை தேர்தலுக்காக யு. என். பி. சார்பில் பிரசாரம் செய்ய அனுப்பப்பட்ட அமைச்சர்கள், பிரமுகர்களின் நடவடிக்கைகள் பற்றி முழு விபரத்தையும் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும்

1977ம் ஆண்டிலிருந்து இப்பொழுதும் நடைபெற்றுள்ள இந்த வன்செயல்கள் மீண்டும் தலைதூக்காமல் இருப்பதற்கு ஒரு அரசியல் தீர்வினைக் காண்பது சரியான வழியெனக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகின்றது.

மாவட்ட அபிவிருத்திசபை என்ற மோசடி மூலம் இதனைச் சாதிக்கமுடியப்பட்டது படுதோல்வியில் முடிந்துள்ளது. இருந்தும் 1977ல் அரசு வாக்களித்தது போல் இது விஷயமாக சகல கட்சிகளதும் மகாநாட்டைக் கூட்டுவது குறித்து பாராமுகமாகவே இன்னும் இருந்து வருகின்றது.

## இளம் பெண்ணின் பரிதாபமுடிவு

(மட்டு நிருபர்)

தாய்லாந்தில் ஆறு வருடங்கள் ஆசிரியையாகக் கடமையாற்றிவிட்டு, பிரிட்டனில் தாதிப்பயிற்சி பெற்று வந்த இளம் பெண் ஒருவர், மனநோய் காரணமாக ஊருக்குத் திரும்பிவந்த, கிணற்றில் விழுந்து தற்கொலைசெய்து கொண்டார்

கட்டுடையில் உள்ள இடிமுண்டுக் கிணற்றில் வீழ்ந்து இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சரஸ்வதி சிவரத்தினம் எனும் 32 வயது) பிரஸ்தாபபெண் மரணம் பற்றிய விசாரணை நீதிபதி மரண விசாரணை அதிகாரி ரு. கே. செனுதிராசா முன்னிலையில் நடைபெற்றது. காலம் சென்றவரின் சகோதரி திருமதி ஜெ ஜீஸ்வரி சுகந்தபாத தன் சாட்சியமளிக்கையில் தமது சகோதரி தாய்லாந்து நாட்டில் ஆறு ஆண்டுகளாக ஆசிரியையாக கடமையாற்றி விட்டு பின்பு பிரிட்டனுக்கு சென்று தாதியாக பயிற்சி பெற வந்தார் என்றும் அங்கு அவருக்கு எதிர்பாராத விதமாக மனநோய் ஏற்பட்டதினால் கடந்த மாதம் ஊருக்கு திரும்பிவிட்டார் என்றும் தெரிவித்தார் மனநோய் வைத்திய நிபுணர் காலம் சென்றவருக்கு அளித்த சிகிச்சைபற்றிய அத்தாட்சிப்படிவமும் மரணவிசாரணை அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார். சாட்சிகளை ஆனைக்கோட்டைப் பொலிசைச் சேர்ந்த திரு. எம். நாதன் ஆஜர்செய்தார்.

## வனலை தீவு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் க. பொ. இரத்தினம் பதினாறாயிரம்ரூபாய் ஒதுக்கி கொடுத்துள்ளார் இதன்படி இவ்விறங்குதுறையைத் தற்காலிகமாகத் திருத்தியமைப்பதற்கான ஒப்பந்தத்தை வனலை தீவு கிராம முன்னேற்ற சபை செய்துகொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் 'அமிர்'

# அரசு நடத்தும் விசாரணையில் நமக்கு நம்பிக்கை இல்லை

## 'அவை' கருச்சிதைவாகவே முடிந்துள்ளன

(நமது சபை நிருபர் மாலி)

[நேற்றைய தொடர்ச்சி]

யாழ் சம்பவங்கள் பற்றி திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது:

''உபசபாநாயகர் அவர்களே, 3-ந் திகதி அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது காங்கேசன்துறையில் துப்பாக்கிகளுடன் நூற்றுக்கும் அதிகமான பொலிசார் சென்று கடைகளை தீயிட்டார்கள். மறுநாள் தேர்தல் தினத்தன்று பரமேஸ்வரன் என்ற விவசாய சேவை உத்தியோகத்தர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். நீர்வேலியில் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது. கோப்பாய் வீதி உரும்பராயில் சலவைத் தொழிலாளி ஒருவரும் சிறுவன் ஒருவரும் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். நல்லூர் உறுப்பினர் அலுவலகத்தை அதிகாலை 2-45 மணிக்கு முற்றுகையிட்ட இராணுவத்தினர் அங்கு விருந்தையில் உறங்கிக் கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவரான பாலஜோதியைச் சுட்டுக்கொன்றார்கள், அவரது சடலம் உறுப்பினரின் அலுவலக விருந்தையில் கிடந்தது. திருகோணமலையில் கப்பற் சேவை பயிற்சியை முடித்த இளைஞர் இவர்.

''5-ந் திகதி இணுவிலில் மதுபானக் கடையொன்று இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டது. பருத்தித்துறை, அச்சுவேலியிலும் கடைகள் கொளுத்தப்பட்டன.

''யாழ்ப்பாணத் தேர்தல் அதிகாரி, உதவித் தேர்தல் ஆணையாளர் ஆகியோர் தமது கடமையைச் செய்யவிடாது தடுக்கப்பட்டனர். 40, 50 வாக்குப்பெட்டிகள் தேர்தல் சட்டத்துக்கமைய வாக்குச் சாவடிகளிலேயே எண்ணப்படாமல் எடுத்து செல்லப்பட்டன. அப்போது தேர்தல் ஆணையாளர் உத்தரவின் பேரில் இவை எண்ணப்பட விருப்பதாக அறிகிறேன்.

### ஐந்து கோரிக்கைகள்

தமது ஐந்து கோரிக்கைகளையும் சபையில் முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர்;

''காலத்துக்குக் காலம் ஏற்படும் இனவாதச் சம்பவங்களால் இன்னலுறும் மக்களாக இந்நாட்டில் தமிழ் மக்கள் இன்றும் இருக்கிறார்கள். இந்நிலை இனியும் நீடிக்க முடியாது அரசாங்கம் நடத்தும் விசாரணைகளில் எமது நம்பிக்கையை நாம் இழந்துவிட்டோம். இச்சம்பவங்கள்பற்றி காலத்துக்காலம் நடைபெற்ற விசாரணைகள் கடைசியில் 'கருச்சிதைவாகவே' முடிந்தன. எனவேதான் நாம் சர்வதேச நிறுவனம் ஒன்றின் விசாரணையைக் கோருகின்றோம்'' என்று ஆக்ரோஷத்தோடு அறிவித்தார்.

''நான் ஏதாவது குற்றம் புரிந்திருந்தால் என்மீதும் விசாரணையை நடத்துங்கள். அந்த விதமாகவே குற்றம் புரிந்த பொலிசார்மீதும் விசாரணையை நடத்துங்கள். இந்த அநியாயச் செயல்கள் அத்தனையையும் இந்த அரசாங்கம் முழுமையாகக் கண்டிக்கவேண்டும்''

இவ்வாறு கூறி திரு. அமிர்தலிங்கம் அமர்ந்தார்.

அரசாங்கத்தின் சார்பில் பதிலளித்துப்பேசிய அமைச்சர் திரு காமினிதிசாநாயக்க கூறியதாவது.

எதிர்க்கட்சித்தலைவர் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்கள் பற்றிக் குறிப்பிட்டார். என்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர விருப்பதாகவும் தெரிவித்தார். அதனைச் சந்திக்க நான் தயாராகவிருக்கிறேன்

மே 31ந் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணி பிரசாரக் கூட்டத்தில் 4 பொலிஸார் சுடப்பட்டனர். அவர்களில் இருவர் இறந்துபோனார்கள் இத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணத்தில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றன. யாழ். பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தை நான் சென்று பார்த்தேன் அப்படியொரு கதி எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்குமோ அல்லது எந்தவொரு பிரஜைக்குமோ ஏற்படவேகூடாது. அந்தச் செயலுக்காக யாழ்' உறுப்பினரிடம் நான் நிபந்தனையற்ற மன்னிப்பைக் கோருகிறேன். இந்தச் சம்பவங்களுக்கு 26 தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூர் பொலிஸாரால் மக்களுக்கு எவ்வித துன்புறுத்தலுமே இல்லை. என்று எதிர்க்கட்சித்தலைவர் இச் சபையில் கூறினார்.

## ஒருவர் பலி: விசாரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

சைக்கிளில் வந்து நின்று. நண்பருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது வாகன மொன்றினுல் மோதி ஒருவர் மரணமானார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த மா. புருசோத்தமனின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சீஸ் மரணவிசாரணை நடத்தினார்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை பின்போடப்பட்டுள்ளது. [க]

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல்:

## வாக்குகளைக் கணக்கிடாத 30 உத்தியோகத்தர் இவர்கள்தான்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல் இம்மாதம் 4ம் திகதி நடைபெற்றபின்னர் வாக்களிப்பு நிலையங்களில் வாக்குகளை எண்ணிக் கணக்குவிபரங்களை 30 சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்கள் யாழ் தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்கவில்லை.

சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்களாக கடமைபுரிந்த 30 உத்தியோகத்தர்களின் விபரம் வருமாறு:

[1] திரு. எல். ரூபசிங்கா [கிராமசேவகர்], கல்கமுல்ல. [2] எஸ். பி. எம். குணரத்ன பண்டா [விவசாய உத்தியோகத்தர்] குருணாகல், [3] ஜே. எச். அபயரத்ன [விவசாய உத்தியோகத்தர்] குளியாப்பிட்டி, [4] ஏ. ஸி. எம். முகமத்ரசிட் [ஆசிரியர்] வெண்டா [5] என். வை. எஸ். கண்டிகார [பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்] வெடிகம, [6] ஏ. ஜி. குமாரசிங்கா [ஆசிரியர்] கொபெக்கெல்ல, [7] ஜே. ஏச். எம். குணரத்ன [ஆசிரியர்] நிக்கிரவட்டியா, [8] ஜே, எச். எம். ஹரத்பண்டா [ஆசிரியர்] குருணாகல், [9] பி. எம். குலரத்ன [அதிபர்] குளியாப்பிட்டி, [10] ஈ. எம். விமலதாசா [விகிதர்] கொழும்பு, [11] டபிள்யு. எஸ். ஹெட்டியாராச்சி [பிரிவுஉத்தியோகத்தர்] தம்பசாமுவ [12] பி. பி. ஜெயவர்த்தன [ஆசிரியர்] கிரியெல்ல, [13] கே. சி. தென்னக்கோன் [ஆசிரியர்] குருணாகல், [14] ஆர் ஏ. நிஹால் பியதிஸ [பியோன்] கச்சேரி குருணாகல, [15] ஆர். எல். பி. சரத்சந்திரா [கிராமசபை செயலாளர்] இம்புலகஸ்தேனியா, [16] டி. எம். ஆர். பண்டா [ஆசிரியர்] மொனகெல [17] கே.ஜி.காரியவாசம் [ஆசிரியர்[ பொல்காவல [18] டபிள்யு. ஜே. ஜே. சுனில்திஸேரா [குடிசனமதிப்பீடு] கொழும்பு, [19[ கே எம், ஏ' குலதுங்கா [அதிபர்] குருணாகல் ]20] எம். கே. ஜெயசுந்தர [தொழில் நுட்ப உத்தியோகத்தர்] குருணாகல் [21] ஆர்.சமரநாயக்கா [உதவி மனேச்சர் விற்பனை இலாகா] குருணாகல் [22 ]ஜே.எம்.விமலசிறி [விகிதர்] குருணாகல, [23] ரி. ஏ. நந்தசிறி ]தொழில் நுட்பஉத்தியோகத்தர்] குருணாகல, [24] டபிள்யு. ஏ. ஹெமசந்திரா [ஆசிரியர்] நிக்கவரட்டியா. [25] டபிள்யு. எம். ஜெயசிங்கா [விகிதர்] குருணாகல், [26] எம். குமாரசிறி [கொள்முதல் உத்தியோகத்தர் விற்பனை இலாகா] குருணாகல், [27] ஏச். எம். ஹிசன்பண்டஹெரத் [விகிதர்] குருணாகல், [28] டபிள்யு. எம். குணவர்த்தன [கச்சேரி பியோன்] குருணாகல், [29] கே. வி. சுமணரத்ன [மின்சார போர்மன்] குருணாகல், [30] டி. பி ஜெயரத்ன [ஆசிரியர்[ நக்கவத்தா. [க]

# இப்படியும் நடக்கிறது

''ஐம்பது ரூபா மாற்றவேண்டிய அவசரம் அவருக்கு! நான்கு கடைகளில் ஏறி இறங்கிவிட்டார். நடக்கவில்லை. தலைமயிரை பிய்த்துவிடலாம் போலிருந்தது அவருக்கு!

திடீரென அவருக்கு ஒரு 'ஐடியா' தோன்றியது. வீதியில் வந்துகொண்டிருந்த நண்பர் ஒருவரை பலவந்தமாக ஒரு தேநீர்க்கடைக்கு அழைத்துச் சென்றார். தேநீர், வடை, சிகரெட்! மொத்தக் கணக்கு ரூபா 3-70.

நமது 'கதாநாயகன்' தனது ஐம்பது ரூபா நோட்டுடன் கம்பீரநடையுடன் காசாளரிடம் சென்றார். ரூபா 3-70 நஷ்டம்தான். எப்படியோ ஐம்பது ரூபா மாற்றப்பட்டு விட்டது.

0 0 0

கொழும்புத் துறைமுகத்தில் நிலவும் ஊழலையும், களவுகளையும் ஒழித்துக்கட்டுவதற்கு புதுத்திட்டம் அமுலுக்கு வந்துள்ளது! இலஞ்சஊழல் திணைக்களத்தைச் சேர்ந்த துப்பறியும்நிபுணர்கள் புது'வடிவம்' கொண்டுள்ளனர்!

இந்த நிபுணர்கள் துறைமுகச்சேவையில் தொழிலாளர்களாகவும் எழுதுவினைஞராகவும் பாதுகாப்பு உத்தியோகத்தராகவும் கடமையாற்றி, இலஞ்சம் வாங்குபவர்களைப் பற்றியும் களவுகளுக்கு திட்டம் வகுப்பவர்களைப் பற்றியும் தகவல்களைச் சேகரிக்கின்றார்கள். இவர்களின் கண்டுபிடிப்பு- நடுமட்டப் பணியாளரே பெரும்பாலும் இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனராம்!

O O

''இலங்கையிலே மூன்றுவகையான வாக்காளர் உள்ளனர். முதலாவது வகையினர் வாக்குச்சீட்டைப் பயன்படுத்துகின்றனர். இரண்டாவது வகையினர் வாக்களியாது விடுகின்றனர். மூன்றாவது வகையினர் வாக்குச்சீட்டுகளில் சுலோகங்களை எழுதுகின்றனர்''.

இப்படிக் கூறியவர்- வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி.

- ஊடுருவி

சைக்கிள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட நஷ்டம் பற்றி பொறியியலாளர் சமர்ப்பித்தஅறிக்கையை யாழ். மாநகரமேயர் திரு. இராஜா விஸ்வநாதன் சபையில் சமர்ப்பித்தார். அந்த அறிகையின்படி பொது சன நூலகத்தில் நூல்கள் தவிர்ந்த சேதவிபரம் வருமாறு; கட்டிடத்துக்கு மட்டும் 6,74,520 ரூபா. தளபாடம் 4,000,00 ரூபா மின்சாரம் 1,40,000 ரூபா. [மா-கு]

## இன்று நந்தாவில் அம்மன் இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு, நந்தாவில் ஸ்ரீ மனோன்மணியம்மன் கோவில் இரதோற்சவம், இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறுகிறது.

நாளை தீர்த்தோற்சவமும் நாளை மறுதினம் பூங்காவன உற்சவமும் நடைபெறுகிறது.

## மரண அறிவித்தல்

### சரஸ்வதிப்பிள்ளை செல்லையா

உடுவில் கிழக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த சரஸ்வதிப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் செல்லையாவின் மனைவியும், இரத்தினம்பாள், செல்வச்சிரஞ்சீவி [மத்தியவங்கி], சுந்தரம்பிள்ளை, ஜெயலட்சுமி, பரலோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினம் [மலேசியா], சண்முகலிங்கம், [இலங்கை வங்கி, சுன்னாகம்], கனகமணி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை [16-6-1981] பகல் 3 மணியளவில் நடைபெறும். [0033]

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி முத்தையா

யாழ்ப்பாணம், ''அன்னைஇல்லம்'' 16, கில்னர் ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்தம்பி முத்தையா அவர்கள் காலமானார். இவர் மு. தர்மகுலசிங்கம் [R. M. P. கல்கமுவ] மு. யோகரத்தினம், மு. இரத்தினசிங்கம் [உள்நாட்டு இறைவரித்திணைக்களம், கொள்ளுப்பிட்டி], முத்து. இராசரத்தினம் [செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்], மு. பரராஜசிங்கம் [T. A. ஓமான்], மங்கையற்கரசி சிவதாசன் [ஆசிரியை, இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, யாழ்ப்பாணம்] ஆகியோரின் தந்தையாவர். மரணச்சடங்குகள் இன்று [16-06-81] மாலை 5-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். 0032

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper at the General Post Office, Sri Lanka
Regd No. QB 100236/81 P. O. Box 49, Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707